Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி -10 | 22-02-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-004

படச்சுருள்கள் அனைத்தையும் கனினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கனினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்,
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.
(சி-8689)
R.V
பந்தல் சேவை,
தர்மபுரம்.

# தேர்தல் வன்முறைகள் தினமும் அதிகரிப்பு

# ஐந்து தினங்களில் 21 வன்முறைகள்

## சிறீல. பொலிஸ் தேர்தல் அலுவலகம் அறிவிப்பு

(கொழும்பு)

**தேர்தல் வன்முறைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக சிறிலங்காப் பொலிஸ் தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது. தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளத் தொடங்கிய கடந்த 17ஆம் திகதி முதல் இதுவரை 21தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸ் தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.**

இதேவேளை நேற்று முன்தினம் மட்டும் ஆறு தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாகவும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஹம்பாகா,களுத்துறை, மாத்தறை, கம்பளை, பொலனறுவை ஆகிய இடங்களில் இந்த வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதேவேளை,பொதுத்தேர் தலுக்கான நியமனப்பத்திரங்களை இதுவரை எட்டுப்பிரதான அரசியல் கட்சிகளும், 43 சுயேட்சைக் குழுக்களும் தாக்கல் செய்துள் ளனர்.நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கான இறுதிநாள் வரும் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00மணியாகும். இதேவேளை நேற்றும், இன்றும் விடுமுறை தின மாதலால் நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இதேவேளை 23,24ஆம் திகதிக ளில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஐ.மக்கள் சுதந்திர முன்னணியும் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது.

*-யாழ். மாவட்டத்தில்-*

## ஆனந்த சங்கரி தலைமையில் சுயேட்சைக் குழு போட்டி?

(வடமராட்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரியின் தலைமையிலான சுயேட்சைக்குழு வொன்று எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதென முடிவாகியுள்ளது. இச்சுயேட்சைக்குழு யாழ்.தேர்தல் மாவட்டத்தில் மட்டுமே போட்டியிடுமெனவும் அதற்கான வேட்பு மனுக்கள் நாளை அல்லது நாளை மறுதினம் தாக்கல் செய்யப் படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதனிடையே இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்புடன் யாழ்ப் பாணத்திற்கு விமானம் மூலம் நேற்றுவந்துசேர்ந்த வீ.ஆனந்த சங்கரி வேட்பாளர் பட்டியலை தயார் செய்வதில் ஈடுபட்டிருந்தார். யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல் வர் செல்வன் கந்தையன் மற்றும் இணுவில் முத்துலிங்கம் ஆகியோர் வேட்புமனுப் பத்திரங்களில் நேற்றுக் கையெழுத்திட்டிருந்தனர்.

இவர்களுடன் மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்கள் சிலரும்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மாவட்டத்தில் மகேஸ்வரன் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் யாழ் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பின ரும் முன்னாள் இந்துகலாச்சார அமைச்சரு மான தி.மகேஸ்வரன் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலில் போட்டியிடவுள்ளார்.

முன்னாள் இந்து கலாச்சார அமைச்சரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மகேஸ்வரன் தனது இந்த முடிவு பற்றி தெரி விக்கும் போது;இம் முறை கொழும்பு மாவட் டத்தில் போட்டியிடுவதெனத் தீர்மானித் துள்ளேன். இதற்கான வேட்புமனுவில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் முன்னிலையில் நேற்று மாலை ஆறுமணியளவில் கையொப்ப மிட்டேன்.

(8ஆம் பக்கம் பார்க்க).

*-தென்மராட்சி சாவகச்சேரிப் பகுதியில்-*

## நகை வர்த்தகர் மீது துப்பாக்கிச்சூடு எடுத்துவந்த நகைகளும் பறிப்பு

(வடமராட்சி)

தென்மராட்சி சாவகச்சேரியில் நகைவர்த் தகர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதுடன் அவரிடமிருந்து நகைகளும் பறித்துச் செல்லப் பட்டுள்ளனர். இவருடன் வேறொருவரும் துப் பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ளனர்.

சாவகச்சேரி நகரப்பகுதியை நோக்கி மோட் டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த சண் முகம் சதீஸ்குமார் (28வயது) எனும் இளைஞ னும் அதேவேளை வீதியால் பயணஞ்செய்து கொண்டிருந்த சத்தியசீலன் துவாகரன் (15வயது) எனும் சிறுவனும் துப்பாக்கிப் பிர யோகத்தில் படுகாயமடைந்துள்ளனர். துப்பாக் கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபர்கள் இராணுவ சீருடை அணிந்திருந்ததாகவும், முகத்தை மூடி கறுப்புத்துணியால் கட்டியி ருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில் சாவகச்சேரி நகரப்பகுதியிலுள்ள நகைக்கடைக்கென பெருமளவு தங்கநகை களுடன் குறித்த சண்முகம் சதீஸ்குமார் எனும் வர்த்தகர் டச்சு வீதியூடாக தனது வீட்டிலிருந்து பயணித்துள்ளார். அவ் வேளையில் அவரது மோட்டார் சைக்கிளை பின்தொடர்ந்து வந்த இருவரே வழிமறித்து துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள் ளனர். அத்துடன் அவரிடமிருந்த பெருமளவு தங்கநகைகளையும் அவர்கள் கொள்ளை யிட்டுச் சென்றுள்ளனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

*-பதவிநீக்கப்பட்ட 20பிரதிஅமைச்சர்கள்-*

## பாராளுமன்ற விடுதியிலிருந்து வெளியேறுமாறு உத்தரவு

(கொழும்பு)

சனாதிபதியால் பதவி நீக்கப்பட்ட பிரதி அமைச்சர்கள் சுமார்20 பேர் அவர்களது நாடா ளுமன்றவிடுதிக்கட்டடங்களிலிருந்து வெளி யேறாதுள்ளதாக நாடாளுமன்ற செயலர் பியானி விஜயசேகர் குற்றம் சாட்டியுள்ளார்.

இவர்கள் உடனடியாக அவ்விடங்களி லிருந்து வெளியேறும்படியும் அவர் உத்தர விட்டுள்ளார்.

இதேவேளை 2001 ஆம் ஆண்டு பொ.ஐ.முன்னணியிலிருந்து பின்னர் தோல்வி கண்டபின்னர் பதவி இழந்த சுமார் 10 பிரதி அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்க ளும் இன்னமும் நாடாளுமன்ற விடுதிக் கட்ட டங்களிலேயே தங்கியுள்ளனர் அவர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப் பட்டிருக்கிறது. (32)

## காங்கேசன் கடற்பரப்பில் சண்டைப் பயிற்சியில் கடற்படையினர்

காங்கேசன் துறைக் கடற்பரப்பில் கடற் படையினர் சண்டைப்பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன் துறை கடல் பாதுகாப்பு வலயப்பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக இடம் பெற்றுவரும் இப்பயிற்சி நடவடிக்கை களின் போது ஏராளமான கடற்படைப்படகு களில் படையினர் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.இதனால்மேற்படிகடல் பாதுகாப்பு வலயத்தை அண்மித்துள்ள கடற்பிரதேசங் களில் தொழிலுக்கு செல்ல வடமராட்சி மீனவர்கள் அஞ்சி வருகின்றனர். இதனால் தொழில் பாதிக்கப்பட்டிருப்பதாக மீனவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (33)

## இரு ஆண்டுகள் படையினரின் யுத்தநிறுத்த மீறல்கள் குறித்து யாழ். மனிதநேய அமைப்புகள் நோர்வே அரசுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தினர் இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவினருடான நோர்வே-அரசுக்குப் மகஜர் ஒன்றை கையளிக்கவுள் ளனர்.

அரசு-புலிகளுக்கிடையான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி இன்றுடன் இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

எனினும் இவ் இரு ஆண்டுகளிலும் யாழ். குடாநாட்டில் படையினர் செய்த யுத்தநிறுத்த மீறல்கள் குறித்தும் இதனால் மக்கள் எதிர் கொண்டுள்ள பிரச்சினைகள் சுட்டிக்காட்டும் விதமாகவும் விடயங்கள் உள்ளடக்கப்பட்ட மகஜரே இவ்வாறு கையளிக்கப்படவுள்ளது.

இன்று காலை இம் மகஜர் இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்பு குழுவின் யாழ். அலுவலகத்தில்வைத்து யாழ். அலுவலக பொறுப்பதிகாரியிடம் கையளிக்கப்படவுள்ளதாக மனிதநேய அமைப்பினர் அறிவித்துள்ளனர். (33)

## இந்திய மீனவரின் அத்துமீறலுக்கு சிறீல. படையினர் ஒத்துழைப்பு

### கடற்றொழிலாளர் ச.ச. செயலாளர் தெரிவிப்பு

இந்திய மீனவர்கள் யாழ் குடாநாட்டுக் கடலில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதற்கு சிறிலங்கா கடற்படையினரின் அலட்சியப் போக்குகளே காரணம் என யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சம்மேளனசெயலாளர் க.சூரியகுமார் குற்றம் சாட்டியுள்ளார்.

நீண்ட காலமாக இல்லாதிருந்த இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் கடந்த சில காலமாக மீண்டும் ஆரம்பித்துள்ளன. இதன் காரணமாககுடாநாட்டு மீனவர்களின் மீன்பிடி உடமைகள் நாசம் செய்யப்படுவதுடன் கடல்

(8ஆம் பக்கம் பார்க்க).

## தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடன் யாழ்.அரசியல் துறையினர் சந்திப்பு

எதிர்வரும் பொதுத் தேர்தல் சம்பந்தமான விடயங்கள் தொடர் பான முக்கிய சந்திப்பு ஒன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின ருக்கும் தமிழீழ விடுதலைப் புலி களின் யாழ் மாவட்ட அரசியல் துறையினருக்குமிடையே இடம் பெற்றுள்ளது.

சிவாஜிலிங்கம், மாவை சேனா திராஜா, கஜேந்திரகுமார் பொன்னம் பலம், விநாகயமூர்த்தி, சுரேஷ் பிரே மச்சந்திரன், சிவநேசன் ஆகியோ ருக்கும் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரி திக்குமிடையே யாழ். மாவட்ட அரசியற்துறைச் செயலகத்தில் நேற்று இச்சந்திப்பு இடம்பெற் றுள்ளது.

இதில் யாழ். மாவட்டத்திலிருந்து போட்டியிடவுள்ள வேட்பாளர் பட்டியல் தயாரிப்புக்கள் மற்றும் பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து ஆராயப் பட்டது. (33)

## எமது இனத்தின் சக்தியை உலகிற்குப் பறைசாற்றும் ஒரு கட்டமாகவே வரும் தேர்தல் களம் அமைகிறது

### அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன்

(கிளிநொச்சி)

"எமது இனம் ஒன்றிணைந்து ஒரு மித்த சக்தியாக உலகிற்கு பறை சாற்றிய பல வடிவங்களின் ஒரு கட்டமாகவே வரப்போகும் பாராளு மன்றத் தேர்தல்களம் அமைகிறது." இவ்வாறு தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளி இந்துக்கல்லூரியில் கடந்த வருடம் பரீட்சைத் திணைக் களத்தால் ஐந்தாம் ஆண்டு மாண வர்களிடையே நடத்தப்பட்ட புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற கிளி.மாவட்ட மாணவர்க ளைக் கௌரவிக்கும் நிகழ்வு கிளி. மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தால் நடத்தப்பட்டது. இதில் கலந்து சிறப்புரை நிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

பல இன்னல்களையும் துன்ப துயரங்களையும் தாங்கி வாழ்ந்த எமது இந்த பிரதேசத்தில் ஒன்றி ணைந்து ஒருமித்து சிறார்களின் நல்வாழ்வுக்காக பாடுபட்ட அனை

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### பி.வி.ஆர். நகைமாடம்

1990 ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு மீண்டும் முல்லைத்தீவில் அதே பழைய இடத்தில் 15.02.2004 தொடக்கம் இயங்கி வருகின்றது. என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மன மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். உரிமையாளர் ஆர்.கிருஸ்ணசாமி (P.V.R.) P.V.R. நகை மாடம், முதன்மைச்சாலை, முல்லைத்தீவு. (சி-7162)

### தவறிவிட்டது

கரவெட்டி கிழக்கு, கரவெட்டி தல்லேபுலம் என்னும் முகவரியுடைய ஏரம்பு மூர்த்தி தயாபரன் ஆகிய எனது அ.அட்டை (இல. 782513761v) தருமபுரத்திற்கும் முத்தையன் கட்டுக்கும் இடையில் 16-02-04 அன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் புது. ஈழநாதம் பணிமனையில் அல்லது ஒட்டுசுட்டான் அரசியல்துறை செயலகத்தில் ஒப்படைக்கவும். (3988)


# சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடமாடும் சேவை பிற்போடல்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட-அரசசெயலகத்தில் இன்றும் நாளையும் நடைபெறவிருந்த சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள நடமாடும் சேவை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதென கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

மேற்படி நடமாடும் சேவை எதிர்வரும் 13,14ஆம் திகதிகளில் மாவட்ட செயலகத்தில் நடைபெறும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலுள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்துக் கிளையில் கிளிநொச்சி மாவட்டத்தினை நிரந்தரமாகக் கொண்டவர்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரம், மற்றும் அனைத்து ரக வாகனங்களுக்கானபதிவுகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் 28ஆம் திகதி வரை நடைபெறும் என கிளி/அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்பதாக தங்களது விண்ணப்பங்களை மாவட்ட செயலகத்திலுள்ள வாகனப் போக்குவரத்து கிளையில் ஒப்படைக்குமாறு வேண்டியுள்ளார்.

## இல்ல மெய்வன்மைப் போட்டி

சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு பாடசாலை அதிபர் திரு.க.திருக்குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா கலந்து கொள்ள உள்ளார். (20)

## அவசர கலந்துரையாடல்

கிளி/மகாவித்தியாலயத்தில் (கனிஸ்டா) இன்று காலை 9.30 மணிக்கு அவசர கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகல கிராம சேவை அலுவலர்களும், மாவட்டத்தில் உள்ள சகல திணைக்கள அலுவலர்களும், தவறாது பங்கு பற்றும் வண்ணம் கிளி/ மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

## கருத்துரை

சமகால நிலைகளை மக்களுக்கு எடுத்தியம்பும் முகமாக புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள கொக்குளாய் அ.த.க பாடசாலையில் நேற்று இசைநிகழ்ச்சியும், நாடகமும் நடத்தப்பட்டது.

வலயப் பொறுப்பாளர் இரத்தினம் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் ஈகச்சுடரினை முள்ளியவளை வலயப் பொறுப்பாளர் ஏற்றிவைக்க நிகழ்வுகள் நடைபெற்றது. (26)

# அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலய இல்ல விளையாட்டுப்போட்டி

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டி அதிபர் திருமதி எல்.எவ்.நடேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பிரதேசச் செயலர் திரு.சி.சத்தியசீலன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா ஜி.ரி.இசற் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.கே. சதாசிவம், வவுனியா யுனிசெப் திட்டமிடல் அதிகாரி ஜனாப் ஐ.ஏ.ஹமீட், வவுனியா கோட்டக்கல்வி அதிகாரி திரு.வீ.கணேசராஜா, வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி திரு.க.பேர்ணாட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்விளையாட்டுப் போட்டியில் 494 புள்ளிகளைப் பெற்று செம்பருத்தி இல்லம் 1ஆம் இடத்தினையும், 488புள்ளிகளைப் பெற்று செந்தாமரை இல்லம் 2ஆம் இடத்தினையும், 409 புள்ளிகளைப் பெற்று செவ்வந்தி இல்லம் 3ஆம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன. (10)


## கல்வி வலயம் மாங்குளத்தில்....

எமது கல்வி வலயம் மாங்குளத்தில் தனது சேவையினைத் தொடர்வதையிட்டு அகமகிழ்ந்து, பாராட்டி வரவேற்று, வாழ்த்துகின்றோம்.

கோட்டக்கல்வி அதிகாரி, அதிபர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், ஒட்டுசுட்டான் கோட்டப் பாடசாலைகள். (சி-7164)

## MF-135/240 டிராக்கரர் வேலைகட்கு விசேட விலைக்கழிவு

3 ஓவர்சைஸ் சிலிவு இறுக்கி வெட்டும் கூலி 2500/=மட்டும்

3 ஓவர்சைஸ் சிலிவு நாம் போட்டு 5000/= 3 செய்துகொடுக்கப்படும்.

3 ஓவர்சைஸ் சிலிவ் போட்டு கிரசாப்வெட்டிகொடுக்க 800/=மட்டும்.

வாட்டர்பம், மோட்டார் சைக்கில் போர்வெட்டசிறங்காப் வெட்டும் கூலி 250/= மட்டும்

பல வருட அனுபவம்மிக்க தொழிலாளர்கொண்டு செய்து கொடுக்கப்படும்.

இயந்திரம்ஸ்,
395 மணிக்கூட்டு வீதி,
பெருமாள் கோயில் அருகில்,
யாழ்ப்பாணம்.

(4260)


# கபடி, தாச்சி, துடுப்பாட்ட கரப்பந்தாட்டப்போட்டிகளும் ஆரம்பம்







மூன்றாவது தமிழீழ தேசிய பெருவிளையாட்டுப்போட்டியின் இரண்டாம் நாள்நிகழ்வுகள் நேற்று சனிக்கிழமை இரண்டாவது நாளாக கிளிநொச்சியில் நடைபெற்றன.

காலை கிளி.பொது விளையாட்டரங்கில் நடைபெற்ற அரங்க நிகழ்வில் தமிழீழ மாணவர் அமைப்பின் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் கௌரி தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து மாவட்டக் கொடிகள் ஏற்றப்பட்டன. அம்பாறை மாவட்ட விளையாட்டு அதிகாரி அப்துல் நல்வார், வட-கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை முன்னாள் உதவிப்பணிப்பாளர் மரியதாஸ், தற்போதைய உதவிப்பணிப்பாளர் K.W. விமலராஜன், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ராணிமைந்தன், மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்களான நிலான் (மட்டு), ரதன்(வவுனியா), கவியாஎன்(மன்னார்), மாதுளன்(யாழ்), ராஜா(கிளி) ஆகியோர் மாவீரர் படங்களுக்கு ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து மைதான நிகழ்வுகள் ஆரம்பமாகின. மருதநகர் உதயதாரகை மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் வவுனியா அணி அம்பாறை அணியை 7-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. வவுனியா அணியின் சார்பில் அரவிந்தன் 4 கோல்களையும், தவராஜா 2கோல்களையும், ரூபன் ஒரு கோலையும் போட்டனர். அம்பாறை அணி சார்பில் ல.லறிக் கோல் போட்டார். இப்போட்டிக்கு பிரதம நடுவராக ந.யோகலிங்கனும், பக்க நடுவர்களாக க.புவனேந்திரராஜா, பெ.தேவர்னந் ஆகியோரும் நாலாவது நடுவராக சி.த.கணேசலிங்கமும் கடமையாற்றினர்.

கிளி. பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற தாச்சி ஆண்களுக்கான போட்டியில் யாழ். அணி மன்னார் அணியை 18-3 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. பெண்களுக்கான போட்டியில் மட்டு அணி சமுகமளிக்காததால் திருமலை அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப் பெற்றது. இப்போட்டிக்கு பிரதம நடுவராக கா.ஜெயசீலன் கடமையாற்றினார்.

கபடி பெண்களுக்கான போட்டியில் கிளிநொச்சி அணி அம்பாறை அணியை 47-11 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. ஆண்களுக்கான போட்டியில் அம்பாறை அணி கிளிநொச்சி அணியை 31-27 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. இப்போட்டிகளுக்கு நடுவர்களாக திருவாளர்கள் ஜஸ்ரின், விமலசேனா, அபேகுணசேகரா ஆகியோர் கடமையாற்றினர்.

கரப்பந்து பெண்களுக்கான போட்டியில் யாழ். அணி மட்டு அணியை 2-0 என்ற செற் கணக்கில் வெற்றி கொண்டது. அம்பாறை அணி கிளிநொச்சி அணியை 2-0 என்ற செற் கணக்கில் வெற்றி கொண்டது. இப்போட்டிக்கு நடுவராக திரு. செல்வராசா கடமையாற்றினார்.

30 ஓவர் கொண்ட துடுப்பாட்டத்தில் வவுனியா, மன்னார், அணிகள் மோதின. மரியதாஸ் தற்போதைய உதவிப்பணிப்பாளர் K.W விமலராஜன், ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற திரு. எதிர்வீரசிங்கம் ஆகியோருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற வவுனியா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 29.5 ஓவரில் சகல இலக்குகளையும் இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது. வவுனியா அணியின் சார்பில் மோகன் குமார் 45 ஓட்டங்களையும், இளங்குமரன் 40 ஓட்டங்களையும், அணித்தலைவர் கௌசிகன் 28 ஓட்டங்களையும் பெற்றனர். எட்வெட்குலாஸ் 3 விக்கெட்டுக்களையும் நிலோ[illegible]ன், யோசிகன் தலா இரு விக்கெட்டுக்களையும் கை[illegible]பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் அணி 28 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 160 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அமல்ராஜ் 55 ஓட்டங்களைப் பெற்றார். மோகன குமார், றொபின்சன் தலா 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இப்போட்டியில் வவுனியா அணி 44 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு நடுவர்களாக செல்வராசா இ.முருகவேல் ஆகியோரும் நிதர்சனம் நிறுவனத்தின் அனுசரணையுடன் தொலைக்காட்சி நடுவராக (3வது நடுவர்) இ.சிறிதரனும் கடமையாற்றினர். பிற்பகல் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் திருமலை அணி யாழ். அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. சுதாகரன் கோல் போட்டார்.

அடுத்து நடைபெற்ற முல்லைத்தீவு - மட்டக்களப்பு அணிகளுக்கிடையிலான போட்டியில் முல்லை அணி 1-0 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்றது. வெற்றிக்கான கோலை சுகந்தன் போட்டார்.

இப்போட்டிக்கு நடுவர்களாக ஜனாப், M.D பர்சூக், கு.முகுந்தன், தேவானந்த், கணேசலிங்கம், பா.முகுந்தன், மு.வடிவேல், பாஸ்கரன், ந.யோகலிங்கம், ஜெயசீலன், அமலன், க.புவனேந் திரராஜா, சிவனேசன் ஆகியோர் கடமையாற்றினர்.

# எவ்வித பாதுகாப்பு முறைமையையும் தகர்க்கும் திறன்மிக்க ஏவுகணை ரஷ்யாவால் உருவாக்கம்!

-அமெரிக்கத் திட்டத்திற்குப் பெரும் சவால்

(மொஸ்கோ)

**எந்தவிதமான பாதுகாப்பு முறைமையையும் ஊடுருவித் தாக்கும் நவீன ஏவுகணையை ரஷ்யா அபிவிருத்தி செய்துள்ளது. ரஷ்யாவின் முதலாவது பிரதி இராணுவத் தளபதி யூரிபலுயேவீஸ்லி இதனைத் தெரிவித்துள்ளார்.**

புதிய ஏவுகணையானது பறந்து செல்கையில் அதற்கெதிரான தடைகளை முறியடித்துச் செல்லும் வகையில் அதனை நெறிப்படுத்தியுள்ளோம். இதனை ரஷ்யா வெற்றி கரமாகப் பரீட்சித்துள்ளது. எந்தவித பாதுகாப்புத் தடைகளையும் மீறிச் செலுத்தும் ஏவுகணையை ரஷ்யாவால் தயாரிக்க முடியும் என்பதைக் கடந்த வியாழனன்று இந்தப் பரிசோதனை உறுதிசெய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், எந்த நாடும் அல்லது நாடுகளின் குழுவும் எதிர்காலத்தில் ஏவுகணை பாதுகாப்பு முறைமையை நிறுவுவதற்கு ரஷ்யாவின் சுயமான பதிலடியாக இது அமையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாரிய அளவில் ஏவுகணை பாதுகாப்புத் திட்டத்தை நிறுவுவதில்லை என பனிப்போர் காலத்தில் அமெரிக்காவும், ரஷ்யாவும் இணங்கியிருந்தன. ஆனால், இந்த உடன்படிக்கையிலிருந்து 2002 இல்அமெரிக்க சனாதிபதி புஷ் பின்வாங்கினார். பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளின் ஏவுகணைத் தாக்குதலிலிருந்து அமெரிக்காவைப் பாதுகாக்க இந்தத்திட்டம் அவசியப்படுவதாக அவர் கூறியிருந்தார்.

இந்நிலையில், ரஷ்யாவின் ஏவுகணைச் சோதனை குறித்து அமெரிக்கா பெரிதாகக் கருத்தெதனையும் வெளியிடவில்லை. அவர்களது பாதுகாப்புக்கு எது சரியெனக் கருதுகிறார்களோ அதனை அவர்கள் செய்ய முடியும் என அமெரிக்கக் கூட்டுப் படைகளின் தளபதி ஜெனரல் ரிச்சர்ட் மையர்ஸ் தெரிவித்துள்ளார். ரஷ்ய-அமெரிக்க உறவில் இது எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது எனவும் அவர் கூறினார்.

பிறநாடுகளின் ஏவுகணைத் தாக்குதலிலிருந்து பாதுகாப்பளிப்பதற்காக ஐம்பது பில்லியன் டொலர் செலவில் அமெரிக்கா அமைக்கத் திட்டமிட்டுள்ள ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்திற்கு ரஷ்யாவின் புதியகண்டு பிடிப்புப் பெரும் சவாலாக அமையும். என்பதோடு, ஆயுதப் போட்டிக்கும் இது வழிவகுக்கும் ஒன்றாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

## மக்களவைத் தேர்தல்!

இந்திய மக்களவைத் தேர்தல் ஏப்ரல், மே மாதங்களில் நான்கு கட்டங்களாக நடைபெறவுள் ளது.

இதனைத் தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது. தேர்தல் குறித்த திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணையகத்தில் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.



நேற்று முன்தினம் அகமதாபாத் நகருக்கு மேற்கே 350 கி.மீ தொலைவில் விபத்துக்குள்ளான இந்திய விமானப்படையின் மிக் – 21 ரக விமானத்தின் சிதைவுகளிடையே காவல் பணியில் ஈடுபட்டுள்ள விமானப் படையினர்.



கொலம்பியாவில் 16ம் நூற்றண்டிலிருந்து நடைபெற்று வரும் உப்பு உற்பத்தி அண்மைய சந்தைப் போட்டியாலும் காணி அபகரிப்பினாலும் கைவிடப்பட்ட நிலையில் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் வயு இந்திய குடிகள் உப்பை அள்ளுகின்றனர்.

# ஈராக்கில் காணப்படும் சூழ்நிலைகளால் தற்போது தேர்தலுக்கான சாத்தியமில்லை

-அமெரிக்க நிர்வாகி போல் பிறிமர்

தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக அடுத்த 12-15 மாதகாலமளவிற்குள் ஈராக்கில் தேர்தல் நடத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லையென்று, ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாகி போல் பிறிமர் கூறியுள்ளார்.

இதற்கு முக்கிய காரணம் தொழில்நுட்ப சிக்கல்களே என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஈராக்கில் தேர்தல் சட்டமும் அரசியல் கட்சிகளை நிர்வகிக்கக் கூடிய தேசிய ஆணைக்குழுவும் இல்லையென்றும் கூறிய அவர்,

வாக்காளர் அட்டைகளும் இல்லை என்பதனால் தொழில்நுட்பச் சிக்கல்கள் உள்ளதாகக் கூறியுள்ளார்.

கடந்த 20வருடங்களில் ஈராக்கில் குடிசன மதிப்பீடுகளும் ஒழுங்காகவும், சரியாகவும் நடத்தப்படவில்லையென்றும் போல் பிறிமர் கூறியுள்ளார்.

ஈராக்கின் அதிகாரம் ஈராக்கியர்களிடமே கையளிக்கப்பட வேண்டுமென்றும் பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் அழுத்தங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ள வேளையில், உடனடி ஈராக் தேர்தல் நடைமுறை சாத்தியமற்றது என்று போல் பிறிமர் மீண்டும் கூறியுள்ளார்.

அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப் படைகளுக்கெதிரான தாக்குதல்கள் இடம் பெற்று வரும் வேளையில் இத் தாக்குதல்கள் தொடர்பாக சர்வதேச ரீதியிலான சந்தேகங்களும் எழுப்பப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தொடர் சந்திப்புக்களுக்கு அமெரிக்கா வற்புறுத்தல்!

(வாஷிங்டன்)

வடகொரியாவின் அணுதிட்டம் சர்ச்சையை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ள ஆறு நாடுகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து அடிக்கடி சந்திப்புக்கள் இடம்பெற வேண்டுமென்று அமெரிக்கா வலியுறுத்திக் கூறியுள்ளது.

பீஜிங்கில் நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் தீர்க்கமான இணக்கப்பாடு இன்றி முடிவுற்றிருந்தது.

இதனையடுத்தே, ஆறு நாடுகளின் இராஜதந்திரிகள் கடந்த ஆறுமாத காலமாக முயற்சி மேற்கொண்டதன் விளைவாக இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

இந்தப் பேச்சு வார்த்தைகளுக்குத், தேவையான திட்டங்கள் வகுக்கப்படுவது மிகவும் அவசியம் என்று அமெரிக்க இராஜாங்க செயலர் கொலின்பவல் கூறியுள்ளார்.

# கெயிட்டியில் அரசியல் நெருக்கடியைத் தீர்க்க சர்வதேச இராஜதந்திரமுயற்சிகள் தீவிரம்!

இணக்கத்திற்கு வர கிளர்ச்சியாளர் மறுப்பு

கெயிட்டியில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச இராஜதந்திரிகள் அதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். அரசாங்கத்தையும் எதிர்க்கட்சிகளையும் ஒரே மேசைக்கு கொண்டு வரும் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளது.


அமெரிக்கா, பிரான்ஸ், கனடா ஆகியவற்றின் இராஜதந்திரிகள் சமரச முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள்.

ஆனால் இராஜதந்திர நடைமுறைகள் சனாதிபதி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆகியோருக்கு மட்டுப்படுத்தப்பட்டவையாகவே காணப்படுகின்றன. முக்கிய நகரங்களைக் கைப்பற்றிய கிளர்ச்சியாளர்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை.

ஆனால் ஆயுதகிளர்ச்சியாளர்களை வழிநடத்தும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் சனாதிபதி பதவிவிலக வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படுமானால் சமாதான வழிகளில் இணைய முடியும் என்று கூறியுள்ளார்.

இதேவேளை கெயிட்டி சனாதிபதி அரிஸ்டைட்டின் ஆதரவாளர்கள் தலைநகரில் ஊர்வலமாகச் சென்றவர்களை தாக்கியதில் நேற்று முன்தினம் 15 பேர் காயமடைந்துள்ளார்கள்.

ஊழல் மோசடிக் குற்றச் சாட்டுகளுக்கு இலக்காகியுள்ள சனாதிபதியை ஆட்சியிலிருந்து கவிழ்க்க முன்னாள் ஆயுதப்படை வீரர்கள் கிளர்ச்சி ஒன்றை ஆரம்பித்துள்ளமை தெரிந்ததே.



ஐ.நா.வின் தேர்தலுக்கான சிபாரிசை பல கோணங்களில் ஈராக்கிய நிர்வாகிகள் நோக்கும் வேளையில் சிரமங்களுக்கு மத்தியில் ஷியா மதத்தவர்களின் படங்களை ஏந்தி ஒன்று கூடியுள்ள முஸ்லிம்கள்.

# பிலிப்பைன்ஸ் பரிசீலனைக்கு முற்றுப்புள்ளியிடப் பேச்சு

(மணிலா)

பிலிப்பைன்ஸில் பல தசாப்துங்களாகத் தொடரும் பிரிவினைவாத போராட்டத்திற்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கு உத்தியோக பூர்வ பேச்சுக்கள் ஏப்ரலில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் பிலிப்பைன்ஸ் நாட்டு அரசாங்க அதிகாரிகளும், முக்கிய கிளர்ச்சிக் குழுவின் தலைவர்களும் கலந்து கொள்வார்கள்.

ரோமன் கத்தோலிக்கர்களை அதிகமாகக் கொண்ட பிலிப்பைன்ஸில் தமக்குத் தனித் தாயகம் வேண்டுமென்று கோரும் இஸ்லாமிய விடுதலை முன்னணி எனும் கிளர்ச்சிக் குழு கடந்த 32 ஆண்டுகளாக ஆயுதப் போராட்டம் நடத்தி வருகின்றது.

இதற்கு முற்றுப்புள்ளி வைத்து அமைதியை ஏற்படுத்தும் சமரச முயற்சிகளுக்கு பிலிப் பைன்ஸ் நாட்டரசு இறங்கியுள்ளது.



நேற்று முன்தினம் பாக்தாத்துக்கு, அண்மையில் நடைபெற்ற ஷியா முஸ்லிம்களின் வழிகாட்டு நிகழ்வின் போது ''குர்ஆனை நேசிப்பவர்களுக்கு சாந்தி கிடைக்கும்'' என்ற சுலோகத்தையுடைய நாடாவை தலையில் கட்டியிருக்கும் ஈராக்கிய சிறுவன்.

## வைகோ புதிய வியூகம்!

(சென்னை)

மக்களவைத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்பதில் உறுதியாக இருப்பதாக ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

இத்தகைய முடிவு அடிமட்டத்திலிருந்து கட்சியை மேம்படுத்தவும், அ.தி.மு.க. ஆட்சியை அகற்ற ஆயத்தம் செய்வதாகவும் அமையும் என்று நேற்று முன்தினம் வைகோ சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

# சட்டத்தை இருட்டடித்த ஜெயலலிதா விழி பிதுங்குகின்றார்

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை மீண்டும் சூடு பிடிக்கவுள்ளது. அதுவும் அவர் எந்த மாநிலத்தில் சொத்துக் குவிப்பு வழக்கின் விசாரணை நடக்கக் கூடாது என்று நினைத்தாரோ அவரது போதாத காலம் அதே மாநிலத்தில்தான் விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்துள்ளது.

இந்திய பாராளுமன்றத் தேர்தல் நெருங்குகின்றது. கூட்டணிக் கட்சிகளோ தேர்தல் பிரச்சாரத்தில் தூள் கிளப்புகின்றன. இந்த வேளையில், ஜெயலலிதா பிரச்சாரத்தில் குதிப்பதா...? சொத்துக்குவிப்பு வழக்கைச் சரிக்கட்டுவதில் ஈடுபடுவதா ...? என்று இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையிலுள்ளார் என்றால் மிகையில்லை.

சொத்துக் குவிப்பு வழக்கைக் கர்நாடக மாநிலத்திற்கு மாற்ற வேண்டாம் என்று தமிழக முதலமைச்சர் தாக்கல் செய்த மனு, உச்ச நீதி மன்றத்தால் நிராகரிக்கப்பட்டிருப்பது அவருக்கு துன்பத்தையே ஏற்படுத்தியுள்ளது.

இதனால் இந்த வழக்கின் விசாரணை கர்நாடக மாநிலத்தில் தான் தொடங்கவுள்ளது. இது ஜெயலலிதாவுக்கு நன்மையளிக்க மாட்டாது என்று நம்பவும் இடமுண்டு.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஊதியம் ஒரு ரூபாயாக இருக்கும் போது கோடி கோடியாக எப்படிச் சொத்துச் சேர்க்க முடியும்? என்று 1996 இல் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி எழுப்பிய கேள்வியும், சர்ச்சையும் இன்று வரை தீர்ந்தபாடில்லை.

தமிழக முதலமைச்சர், அவரது வளர்ப்பு மகன், அவரது தோழி சசிகலா ஆகியோர் மீதான 66 கோடி ரூபா வருமானத்துக்கு அதிகமான சொத்துக் குவிப்பு வழக்கு நீதிமன்றத்தில் 1997 இல் இருந்து இழுபட்டுக்கொண்டே வருகின்றது.

தமிழகத்தில் ஜெயலலிதா முதலமைச்சராக இருக்கும் வரை சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை என்பது வெறும் கண்துடைப்பே என்பதைப் புரிந்து கொண்ட தி.மு.க. அன்பழகன், இந்த வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்றும்படி உச்ச நீதிமன்றத்திடம் கேட்டிருந்தார்.

வாஜ்பாய் அரசும் கூட்டணிகள் விலகிப் போய்விடக் கூடாது என்பதற்காக, இந்த வழக்கை வேற்று மாநிலத்திற்கு மாற்றும் தி.மு.க. அன்பழகனின் கோரிக்கைக்கு உச்ச நீதிமன்றமே தீர்ப்பளிக்கட்டும் என்பது போல பேசாமடந்தையாகிவிட்டார் எனலாம்.

இதனையடுத்து கர்நாடகத்தின் பெங்களூரிலுள்ள தனி நீதிமன்றத்தில் இந்த சொத்துக் குவிப்பு வழக்கு மாற்றப்பட்டது. கர்நாடக தனி நீதிமன்றம் வழக்கு விசாரணைகளுக்கு தயாராகியுள்ள நிலையில், ஜெயலலிதா அங்கு சென்று விசாரணையில் பங்கேற்க பின்னடிப்பு செய்கின்றார்.

ஏனெனில் தமிழகத்தில் இதுவரை நடந்ததெல்லாம், சென்னையில் வழக்கு விசாரணை என்ற பெயரில் வெறும் கண்கட்டு விளையாட்டே என்றால் மிகையில்லை.

சென்னை தனிநீதிமன்றத்தில் விசாரணை ஆரம்பமாகும். ஜெயலலிதா விசாரணைக்கு செல்லமாட்டார். அவரது சார்பில் அவரது வழக்கறிஞரே விசாரணையில் பங்குகொள்வர்.

சொத்துக் குவிப்பு சம்பந்தமாக எழுப்பப்படும் கேள்விகள் அனைத்தையும் ஒன்று விடாமல், ஜெயலலிதாவின் வழக்கறிஞர் குறித்துக்கொள்வார். அத்துடன் அன்றைய விசாரணை முடிவடையும்.

அடுத்த கட்ட விசாரணை வருவதற்குள் சட்டத்திலுள்ள சந்து பொந்துகளை வழக்கறிஞர்கள் மூலம் ஆலோசித்து ஜெயலலிதா தன்மீது குற்றமற்ற வகையில் நீதிமன்றத்தில் எழுப்பப்பட்ட வினாக்களுக்கு விடை தயாரித்துவிடுவார். அதனை அப்படியே வரிபிசகாமல் ஜெயலலிதாவின் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் மறுமுறை வாசித்துக் காட்டுவதுமே இதுவரை தமிழகத்தில் நடத்தப்பட்ட கண்துடைப்பு விசாரணை ஆகும் குறுக்குக் கேள்விகள் கேட்கப்படும் போதெல்லாம் பதில் சொல்ல கால அவகாசம் இதுவரை ஜெயலலிதாவுக்கு இருந்து வந்தது.

அத்துடன், தனி நீதிமன்றத்தின் நீதிபதி வழக்கை தனக்கு சாதகமற்று நடத்த எத்தனிக்கின்றார் என்று சந்தேகம் கொள்ளும் போதெல்லாம் அவர்கள் இடம் மாற்றப்பட்டார்கள் என்பது அடுத்த உண்மை.

அந்தவகையில் புதிதாக நியமிக்கப்படும் நீதிபதி ஆரம்பத்திலிருந்தே வழக்கு விசாரணைகளைத் தொடரவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார். இதனால் காலம் கரைந்து போகும் எனும் தமிழக முதலமைச்சரின் நம்பிக்கை வீண் போகவில்லை.

அதனால் தான் 1997 இல் இருந்து இன்றுவரை இந்த வழக்கு விசாரணை முடிவுறாமலும் தீர்ப்பு வழங்கப்படாதும் உள்ளது.

அதுமட்டுமன்றி குற்றவாளிக் கூண்டில் நிற்க வேண்டியவர் தமிழக முதலமைச்சர் என்பதனால் நீதியைப்பாதுகாக்க வேண்டிய நீதிபதிகள் இந்த வழக்கை எப்படிக் கையாள்வது என்று புரியாது திணறியதும் விழிபிதுங்கி நின்றதும் கவலைக்குரிய விடயங்கள்.

தமிழக முதலமைச்சர் என்றாலும் நீதிக்கு முன் சமமே என்று வழக்கு விசாரணைகளைத் தொடர முயன்ற நீதிபதிகள் இடைநடுவில் மாற்றம் செய்யப்பட்டனர்.

மறுபுறம் இதனைப் புரிந்து கொண்டு புதிதாக வந்தவர்கள் முதலமைச்சருக்கு ஏற்ப வளைந்தும் கொடுத்தனர்.

இதனால் தான் இற்றைக்கு ஏழுவருடங்கள் இந்த வழக்கு விசாரணை தீர்ப்பளிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்றால் மிகையில்லை.

இந்த நிலையில் கர்நாடக மாநிலத்திற்கு சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை மாற்றப்பட்டுள்ளது என்பது ஜெயலலிதாவைப் பொறுத்தவரை சந்தோஷப்பட்டுக் கொள்ளக் கூடிய விடயமல்ல.





தோழி சசிகலா

ஏற்கனவே கர்நாடகா மாநிலத்துடன் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, நட்புறவை வளர்த்துக் கொள்வதற்குப் பதிலாக பகைமையைத் தேடிக் கொள்வது போலவே நடந்து கொண்டுள்ளார்.

வீரப்பன் கர்நாடக மாநிலத்தில்தான் பதுங்கி வாழ்கின்றான். தமிழகத்தில் இருந்திருந்தால் எப்போதோ கைது செய்யப்பட்டிருப்பான் கர்நாடக மாநிலம் வீரப்பனை பிடிக்க வலுவற்று இருக்கின்றது என்பது போல அறிக்கைகள் விட்டிருக்கின்றார்.

அதுமட்டுமன்றி காவிரி நீர் விவகாரம் தொடர்பாக தமிழக முதலமைச்சர், கர்நாடக முதலமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா மீது அவமதிப்பு வழக்கு முதல் தண்ணீர் திறந்து விடமறுக்கின்றார் எனும் வழக்குவரை சுப்ரீம் கோட்டில் வழக்குத் தாக்கல் செய்தார். இதன் மூலம் கர்நாடக முதலமைச்சருக்கு நெருக்கடிகளைக் கூட உருவாக்கி இருக்கின்றார்.

இது மட்டுமா... இந்து பத்திரிகையாசிரியர் ராம், கர்நாடக மாநிலத்தில் விழாவில் கலந்து கொள்ளச் சென்றபோது அங்கு சென்று அவரைக் கைது செய்ய தமிழக பொலிசாரை தூண்டினார். இதனால் இருமாநில பொலிசாரும் முரண்பட்டுக் கொண்டதும் அப்போதுதான்.

இவ்வாறு கர்நாடக மாநிலத்துடன் ஜெயலலிதா அதிருப்தியை ஏற்படுத்திக் கொண்டதால் தான் இன்று அந்த மாநிலத்தில் வழக்கு விசாரணை நடைபெறுவதற்கு பின் நிற்கின்றார்.

ஏனெனில் கர்நாடகஅரசு தன்னுடனான அதிருப்திகளையெல்லாம் தனது வழக்கு விசாரணையின் பால் திசை திருப்பி விடுமானால் ... விளைவு பாதகமாகவே அமையும் என்பது அவரது அச்சம்.

அ.கலைவாணி

அதுமட்டுமன்றி கர்நாடக மாநிலத்தின் தனி நீதிமன்றத்தில் இவரே நேரில் செல்ல வேண்டும். குறுக்கு விசாரணையின் போது கூண்டில் ஏறி வழக்கறிஞர்களின் கேள்விகளுக்கு உடனுக்குடன் பதிலளிக்க வேண்டும், தமிழகம் போல் வழக்கறிஞர்களை வைத்து ஆராய்ந்து பதிலளிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

அத்துடன், ஜெயலலிதாவின் வசதிக்கேற்ப விசாரணை நாட்கள் ஒத்திப்போடப்பட மாட்டாது. நீதிமன்றம் அழைக்கும் போதெல்லாம் கர்நாடக மாநிலத்திற்குச் சென்றே ஆக வேண்டும்.

இதனால்தான் கர்நாடகத்தில் சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை என்பது ஜெயலலிதாவுக்குக் காத்திருக்கும் பொறி என்றே எண்ணத்தோன்கின்றது.

அதேவேளை தேர்தல் நெருங்கி வருகின்ற இந்த தருணத்தில், ஜெயலலிதா வினால் திருப்தியுடன் பிரச்சாரத்தில் ஈடுபடமுடியாமலும் போகலாம்.

மறுபுறம் அ.தி.மு.க. வுடன் கூட்டணி சேர்ந்துள்ள பாரதிய ஜனதாவுக்கு இந்த வழக்கு விசாரணை பெரும் தலைவலியாகவே இருக்கப் போகின்றது.

ஏற்கனவே தமிழகத்தில் ஜெயலலிதாவின் அடாவடித்தனங்கள் அதிகம் என்று கருதப்படுகின்றது. பொடோ சட்டம், எழுத்துரிமை பறிப்பு, பேச்சு சுதந்திரம் என்பவற்றை எல்லாம் பறித்தெடுக்கும் சர்வாதிகாரி என்று கூறுமளவிற்கு அவரது நடவடிக்கைகள் சாட்சியம் கூறுகின்றது.

அத்துடன் அரச ஊழியர்கள் வேலை நிறுத்தம், மதுபான சாலைகளை அரசுடைமை ஆக்கல், இலவச மின்விநியோக தடை, கட்டாய நிலத்தடி நீர் சேமிப்பு என்று மக்களின் விசனத்தையும் சம்பாதித்துக் கொண்டுள்ளார்.

இந்த நிலையில் சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை திருப்தியின்றிப் போகுமானால் அதனால் அதிகம் பாதிக்கப்படப் போவது பாரதிய ஜனதாக் கட்சியும் தான்.

ஏனெனில் கூட்டணிகள் விலகிய போது, ஓடிவந்து கைசேர்த்துக்கொண்டது அ.தி.மு.க தான் இன்றும் அதே அ.தி.மு.க வால் தான் மத்தியரசின் சாதனைகள் மக்கள் மத்தியில் பிரகாசிக்க முடியாமலும் போகும். பூவோடு சேர்ந்த நாரும் வாசம் பெறும் என்பது போல சிக்கல்களையும், மக்களுடைய அதிருப்தியையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஜெயலலிதாவுடனான கூட்டு என்பது நிச்சயம் பாரதிய ஜனதாவுக்கு ஒரு கறையாகவே இருக்கப் போகின்றது.

ஆனால் 1997இல் இருந்து சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை முடிவடையாது தொடர்வதால் பெங்களூரில் தனி நீதிமன்றத்தில் நியாயமான முறையில் வழக்கு விசாரணை உடனடியாகத் தொடர வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் அறிவித்திருக்கின்றது.

எனவே உச்ச நீதிமன்றத்திற்கு அதிக அதிகாரங்களை வழங்கிய மத்தியரசினால் இன்று ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கில் தலையிட முடியாதுள்ளது. உச்சநீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்பு மத்தியரசின் கையை மீறிய விவகாரமாகிவிட்டது.

எனவே தேர்தல் முடிவடைவதற்குள் ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணையை பெங்களூர் நீதி மன்றம் ஆரம்பிக்கக்கூடும்.

அதேநேரம் தி.மு.க. தலைமையில் அணி சேர்ந்துள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் இந்த சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை மீண்டும் ஆரம்பமாவது பிரச்சாரத்திற்கான நல்லதொரு உத்தியாகவும் மாறிவிடப் போகின்றது.

ஏற்கனவே அரச ஊழியர்கள் 999 பேரை கட்டாய பணி நீக்கம் செய்திருந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீண்டும் அவர்களைப் பணியில் சேர்த்திருப்பது தேர்தலுக்கான ஒரு பிரச்சார உத்தியேயன்றி வேறில்லை. இதனை அரச ஊழியர்கள் புரிந்து கொள்ளாமல் இருக்க மாட்டார்கள்.

அது மட்டுமன்றி அண்மையில் சிறந்த மாநில முதலமைச்சர் என்று இந்தியா ருடே நடத்திய கருத்துக் கணிப்பில் தமிழக முதலமைச்சர் முதல்10இடங்களுக்குள் கூட வரவில்லை 19வது [illegible]தில் உள்ளார்.

எனவே வாஜ்பாய் எவ்வளவு தான் ஜெயலலிதாவை உயர்த்திப் பிரச்சாரம் செய்தாலும் இந்தக் கருத்துக் கணிப்பு மாறிவிடப் போவதில்லை.

அதேநேரம் இந்தியாவில் தான் உலகளாவிய ரீதியில் ஏழை மக்களில் 1/3 பங்கினர் (26கோடி) வாழ்கின்றார்கள் என்று சமூகவியலாளர் செமூர் ஸ்சிமித் கூறியுள்ளார். ஒரு நாள் வருமானம் ஒரு டொலருக்கும் குறைவானவர்கள் தமிழகம் உட்பட வாழ்கின்றார்கள் என்பதும் அவரது கணிப்பு.

இதனை வைத்துப் பார்க்கையில், மக்களின் வறுமையை ஒழிக்க பாடுபடவேண்டியவர் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவும் தான்.

ஆனால் அவரோ 66 கோடி ரூபா வருமானத்துக்கு மீறி சொத்துச் சேர்த்து வைத்திருக்கின்றார் என்றால் இவரா மக்களுக்கு தொண்டாற்றப் போகின்றவர் என்பது மிக இயல்பாக எழும் வினாவாகும்... எனவே சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை கர்நாடகத்தில் தொடர இருப்பது ஜெயலலிதாவின் தேர்தலுக்கு ஒரு பின்னடைவை ஏற்படுத்தும் என்றால் மிகையில்லை.

அதேவேளை இந்த வழக்கு விசாரணையில் ஜெயலலிதா குற்றவாளி என்று இனங் காணப்படுவாரானால் அவரது முதலமைச்சர் பதவி பறிபோகும் அவர் அரசியல் வாழ்க்கையில் இருந்து ஒதுங்கவும் நேரிடும் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

# பிறருக்கு உதவும் மனப்பாங்கு வளர வழிகாட்டிய பேடன் பவல் பிரபு



மனிதர்களில் சிலர் பிறருக்கு உதவுவர். சிலர் தாம் உண்டு, தம்பாடு உண்டு என வாழ்வர். சிலர் பிறர்மேல் பொறாமை கொள்வர். இவ்வாறாக மனிதர்களில் பலரகம் உண்டு. இவர்கள் அனைவரதும் மனப்பாங்குகளை மாற்றி பிறருக்கு உதவும் மனப்பாங்கை அனைவரினதும் மனங்களில் ஏற்படுத்தப் பாடுபட்டவரே சாரணியத் தந்தை பேடன் பவல் பிரபு ஆகும்.

சாரணியத்தின் தந்தை என அழைக்கப்படும் றொபட் ஸ்டிவன்சன் ஸ்மித் பேடன் பவல் 1857 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி இலண்டன் மாநகரில் பிறந்தார். ஒக்ஸ்போட் பல்கலைக்கழக பேராசிரியர் F.G.பேடன் பவல் என்பவருக்கும், பிரித்தானிய கடற்படைத் தளபதிரி.ஸ்மித் என்ப வரின் மகளுக்கும் மகனாக றொபட் ஸ்டிவன்சன் ஸ்மித் பேடன் பவல் பிறந்தார். 9 அங்கத்தவரைக் கொண்ட குடும்பத்தில் பிறந்த பேடன் பவல் 1880 ஆம் ஆண்டில் இலண்டன் சாட்டட் ஹவுஸ் கல்லூரியில் உபகாரச் சம்பளம் பெற்று கற்பதற்குச் சேர்ந்தார்.

கல்வியில் சிறந்த மாணவனாக இல்லாத போதிலும், பிற வேலைகளில் மிகவும் உற்சாகம் உள்ள மாணவராகக் காணப்பட்டார். கல்லூரி உதைபந்தாட்டக் குழுவின் முக்கிய நட்சத்திர வீரராகவும், சங்கீதத்திலும் நடிப்புத்திறனிலும் விருப்பம் உடையவராகவும், சித்திரக் கலையில் கைதேர்ந்தவராகவும் விளங்கினார்.

பேடன் பவல் தனது 19 ஆவது வயதில் இராணுவப் பட்டம் பெற்று இராணுவத்தில் சேர்ந்துகொண்ட இவர் உபலெப்ரினன்டாக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். இராணுவத்தில் கடமை, கண்ணியம்,கட்டுப்பாடு ஆகியவற்றில் சிறந்து விளங்கிய இவர் தனது ஊக்கத்தினாலும், உற்சாகத்தினாலும் பல பதவிகளைப் பெற்றார்.இதனால் தனது 26 ஆவது வயதில் தளபதியாகப் பதவி உயர்வு பெற்றார்.

1887 ஆம் ஆண்டு ஆபிரிக்காவில் நடைபெற்ற யுத்தத்தில் திறமையாகச் செயற்பட்டு பெரும் புகழ் ஈட்டினார். இவரது திறமையைக் கண்ட ஆபிரிக்க மக்கள் இவரை ஒரு போதும் துயில் கொள்ளாத ஓநாய் என்ற பொருள் பட "கிம்பிசா" என்று அழைத்தனர். 1889 ஆம் ஆண்டு 'கேணல்' பதவி உயர்வு பெற்று சிறுபடையுடன் ஆபிரிக்காவில் போயர் யுத்தத்தில் ஈடுபட்டு 217 நாளில் "மேஜர் ஜெனரல்" பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

பின்னர் 1901 ஆம் ஆண்டு

**இன்று சாரணியத் தந்தை பேடன்பவல் பிரபு பிறந்ததினம்**

ஆபிரிக்காவில் இருந்து தாய்நாடான இங்கிலாந்திற்குத் திரும்பினார். இராணுவத்தில் இருந்து விலகிய இவர் தனது யுத்தகால அனுபவங்களைப் பற்றிப் பல நூல்களை எழுதி வெளியிட்டார். இவற்றுள் "சாரணியத்துக்கான துணை" என்னும் நூலும் ஒன்றாகும். இந்நூல்கள் மக்களிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

ஒவ்வொருவரும் தம் சமயத்திற்கும், தாய்நாட்டிற்கும் உதவி செய்ய வேண்டும். அதுவே அவரது கட்டாய கடமை ஆகும். பிறருக்கு உதவும் மனப்பாங்கு வளர வேண்டும். இளம் சிறார்களின் உடல், உள வளர்ச்சிக்கும் அவர்கள் சமுதாயத்தில் நற்பிரஜைகளாக வாழ்வதற்கும் சாரணியம் உதவ வேண்டும் என சிந்தித்தார். அச்சிந்தனையின் வடிவமே சாரணர் இயக்கம் ஆகும்.

சாரணர் இயக்கத்தை ஆரம்பித்து 1907 ஆம் ஆண்டு 20 சிறுவர்களுடன் முதலாவது பரீட்சார்த்தப் பாசறையை இங்கிலாந்துக் கால்வாயில் உள்ள "பிறவுண்ஸ்" தீவில் நடாத்தி வெற்றிகண்டார். இதன் மூலம் "பிரபு பேடன் பவல்" என அழைக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து சாரண இயக்கம் உலகெங்கும் பரவத் தொடங் கியது. 1912 ஆம் ஆண்டில் உலக சுற்றுலாவை மேற்கொண்டு இலங்கைக்கும் வந்து சேர்ந்தார். இலங்கையிலும் சாரண இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார்.

1920 ஆம் ஆண்டு இலண்டன் ஒலிம்பிய மாநகரில் சர்வதேச சாரணர்களை அழைத்து முதலாவது "ஜம்பொறி" நடாத்தப்பட்டது. இவ் ஜம்பொறியின் முடிவில் பேடன் பவல் பிரபு உலக பிரதம சாரணராகப் பிரகடனம் செய்யப்பட்டார். தனது இறுதிக் காலத்தை கென்யாவில் கழித்த பேடன் பவல் பிரபு 1941 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆம் திகதி 84 ஆவது வயதில் விண்ணுலகை அடைந்தார்.

இவரால் ஆரம்பிக்கப்பட்ட சாரணர் இயக்கம் இன்று உலகில் 200 இற்கும் அதிகமான நாடுகளில் இயங்கி வருகின்றது. இதில் 1.5 கோடிக்கும் அதிகமான சாரணர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் தமது இயக்கத்தின் தந்தையை இன்று நினைவு கூருகின்றனர். பேடன் பவல் பிரபுவின் கனவை நனவாக்கிக் கொண்டிருக்கும் சாரணர்களின் பணி மென்மேலும் வளரட்டும். அவர்களது சேவை தமிழீழ தாயகத்திற்கும் தேவை.

கண்டாவளையூர்
ஆறு.சுபாஸ்கரன்

# இந்திய மீனவர்களின் உண்ணாவிரதம் உறுதி மொழியையடுத்து கைவிடப்பட்டது

யாழ்.சிறைச்சாலையில் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த இந்திய மீனவர்கள் இந்திய உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகளின் உறுதி மொழிகளைத் தொடர்ந்து தம் போராட்டத்தை கைவிட்டுள்ளனர்.

தம்மையும், தம்மிடமிருந்து சிறிலங்கா கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட இழுவைப்படகுகளையும் விடுவிக்கக்கோரி கடந்த 1ஆம் திகதி முதல் இந்திய மீனவர்கள் 65பேர் யாழ்.சிறையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இவர்களின் உடல்நிலை மோசமடைந்து வருவதாக யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் சிவசுந்தரத்தால் வழங்கப்பட்ட தகவலைத் தொடர்ந்து நேற்று முன்தினம் யாழ்.வந்த இந்திய உயர்ஸ்தானிகராலய 2வது செயலாளர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள உண்ணாவிரதிகளையும், போராட்டத்தில் ஈடுபடும் உண்ணாவிரதிகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

இதன் போது இவர்களை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை சிறிலங்கா சட்டத்திணைக்களத்துடன் தொடர்பு கொண்டபோது மூன்று மாதத்துக்குள் மேற்கொள்வதாக உறுதியளித்ததை அடுத்து உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் வழங்கிய உறுதிமொழியை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. (33)

# அதிகரித்த வேகத்தில் பயணித்த உந்துருளி விபத்துக்குள்ளானது!

## -இருவர் படுகாயமடைந்தனர்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சியில்அதிகரித்த வேகத்தில் பயணம்செய்த உந்துருளியொன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த இருவர் படுத்த காயங்களுக்குள்ளாகினர்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியில் இடம்பெற்றது.

அதிகரித்த வேகத்தில் வந்த உந்துருளி திரும்ப முற்பட்ட போது இந்த விபத்து நேரிட்டது. மேலும், உந்துருளியும் சேதமடைந்தது. (12)

# முல்லையில் நான்கு வீதிகள் புனரமைக்க உத்தேசம்

(முல்லை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 'காப்' திட்டத்தின் கீழ் நான்கு வீதிகள் புனரமைக்கப் படவுள்ளன.

மாங்குளம்-வெள்ளாங்குளம் வீதி, மாங்குளம்-முல்லைத்தீவு வீதி, புளியங்குளம்-முல்லைத்தீவு வீதி, கொக்குளாய்-முல்லைத்தீவு வீதி என்பனவே புனரமைக்கப்படவுள்ள வீதிகளாகும்.

இவற்றிக்கான நிதி கிடைத்தவுடன் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் வின்சன்றோய்ஜெப்றி தெவித்தார். (20)

# சிறுவர் உரிமைக்கான விழிப்புணர்வு பிரச்சார பயிற்சிப் பட்டறை நிகழ்வு

(பூநகரி)

வலயக் கல்விப்பணிப்பாளரின் அனுசரணையுடன் தமிழர்புனர்வாழ்வுக் கழகமும், யுனிசெவ் நிறுவனமும் இணைந்து வடக்கு கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இத்திட்டத்தின் ஒரு தொடர் நிகழ்வாக கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிக் கோட்ட பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வுப் பிரச்சாரப் பயிற்சிப்பட்டறை ஒன்று நேற்று முன்தினம் பூநகரி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சிப் பட்டறையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகளும், யுனிசெவ் பிரதிநிதிகளும் பூநகரிக் கோட்டத்தின் 14 பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். (34)

# மு.கா.வின் 4 பா.உறுப்பினர்கள் ஐ.ம.சுதந்திர முன்னணியில் இணைவு

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் 4 பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிடவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். முன்னாள் அமைச்சரான ஏ.எல்.எம். அதாவுல்லா மற்றும் 4 பாராளுமன்ற உறுப்பினர்களான கபீல், அஸீஸ், அன்வர், இஸ்மாயில் ஆகியோரே இவர்களாவர். கொழும்பில் ஊடகவியலாளர் மத்தியில் அதாவுல்லா உரையாற்றுகையில் கிழக்கில் 3 சமூகத்தவர்களும் சமாதானமாக வாழ்வதற்கு ஏதுவாக சனாதிபதியின் கொள்கைகளைப் பலப்படுத்துவது தமது நோக்கமாகும் என்று கூறினார்.

# மெய்வன்மைப் போட்டிகள் நடைபெற ஏற்பாடு

(வடமராட்சி கிழக்கு)

உடுத்துறை மகாவித்தியாலயம்,மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் முறையே 25,26ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (11)

# மெய்வன்மை திறனாய்வுப் போட்டி


(முறிகண்டி)

திருமுறிகண்டி இந்து வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு விளையாட்டுப் போட்டி வித்தியாலய அதிபர் ஆ.சூசைநாதர் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராகத் துணுக்காய் வலயக்கல்விப் பணிமனையைச் சேர்ந்த வனநிலையப் பயிற்சி ஆசிரியர் சோ.தியாகராசா கலந்து சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

சேரன்,சோழன்,பாண்டியன் இல்லங்களுக்கிடையிலான போட்டியில் பாண்டியன் இல்லம் அதிக புள்ளிகளைப் பெற்று வெற்றிபெற்றது. பாண்டியன் இல்லம் 531,சோழன் இல்லம் 390, சேரன்இல்லம் 375. (09)

# விபத்தில் பலியான நபர் அடையாளம் காணப்பட்டார்



(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி 155ம் கட்டை பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கையஸ் வாகனம் உந்துருளி விபத்தில் பலியானவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உந்துருளி திருத்தகத்தில் பணிபுரிந்து வந்த யாழ்.வண்ணார் பண்ணையைச் சேர்ந்த இராசலிங்கம் மனோகரன்(வயது24) என்ற இளம் குடும்பஸ்தரே மேற்படி சம்பவத்தில் பலியானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

# தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இருபது ஆசனங்களை வெல்ல வேண்டும்

-இரா.சம்பந்தன் வலியுறுத்து

(திருமலை)

**நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 20 ஆசனங்களை வெல்ல வேண்டும். இது ஒரு சாதாரண தேர்தல் அல்ல என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**

வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற கூட்டமைப்பின் மாவட்டப் பிரமுகர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் பேசும் போதே இதனைத் தெரிவித்தார்.

"நடக்கவிருப்பது சாதாரண தேர்தல் அல்ல. தமிழ் மக்கள் இதனை ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகக் கருத வேண்டும்" என்றும் சம்பந்தன் தனது பேச்சில் வலியுறுத்தினார்.

"நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலில் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குறைந்தது 20 ஆசனங்களை வெல்ல வேண்டும். திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டு ஆசனங்களை வெல்ல வேண்டும். மூன்றாவது ஆசனத்தைப் பெறுவதற்கு முறையான போட்டியில் ஈடுபட வேண்டும்"

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக எண்ணிக்கையுடனான எம்பிகளுடன் பாராளுமன்றம் வரப்போகின்றது; அதனை முறியடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தென்பகுதியில் உள்ள பலம் வாய்ந்த அரசியல் சக்திகள் சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளன என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

விடுதலைப்புலிகள் தங்களின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத்திட்டத்தை அரசாங்கத்திடம் சமர்ப்பித்திருக்காவிட்டால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருக்காது; தேர்தலும் வந்திருக்காது. விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாக யோசனையைச் சமர்ப்பிக்காது என்று திடமாக நம்பியிருந்த தென் பகுதி அரசியல் சக்திகள், விடுதலைப்புலிகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தைச் சமர்ப்பித்ததும் அதிர்ச்சியடைந்தன. அவ்வதிர்ச்சியின் வெளிப்பாடுதான் மூன்று அமைச்சுக்களின் பறிப்பும் பாராளுமன்றக் கலைப்பும் என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டம் யாருக்கு உரியது என்பதை எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் ஐயத்துக்கு இடமின்றி வெளிப்படுத்த வேண்டும். தொண்ணூற்றி ஐந்து வீதத்திற்கு அதிகமான தமிழ் வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துவதன் மூலமே இதனை நிலைநாட்டலாம் என்றும் அவர் கூறினார். (20)

## கொலை மிரட்டல்

யாழ்.பல்கலைக்கழக பீடாதிபதி ஒருவருக்கு இனந்தெரியாதோரால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளை வானில் வந்த குழுவினரால் இக்கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. (33)

## வாக்காளர் அட்டை விநியோகம் 16ஆம் திகதி ஆரம்பமாகிறது

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணி எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஏனைய பகுதிகளுக்கு நாட்டில் உள்ள அஞ்சலகங்கள் மூலம் விநியோகிக்கப்படும் அதேநேரம், வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதில் விசேட நடைமுறைகள் சேர்க்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் வடக்கு-கிழக்குப் பகுதியில் வாக்காளர் அட்டையை விநியோகிக்கும் போது பாதுகாப்பு தரப்பின் முழுமையான ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும்.

அதேவேளை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கும் விநியோகிக்க போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முழுமையான ஒத்துழைப்புப் பெற்றுக்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.



நாட்டுப் பற்றாளர் பொன்.விநாயகமூர்த்தியின் ஞாபகார்த்தமாக கிளி.மாவட்ட வைத்தியசாலையில் நேற்று இரத்ததான நிகழ்வொன்று நடைபெற்றது. இதில் இரத்ததானம் செய்யும் ஒருவரைப் படத்தில் காணலாம். (படம்-சோதி)

## வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீட்டு நிதியினை தேர்தல் செலவுக்கு ஐ.தே.க.கையாள்கை!

-திறைசேரி மீது சனாதிபதி கண்டனம்

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டம் மூலம் ஒதுக்கப்பட்ட சில முக்கிய நிதிகள் அரசாங்கத்தால் தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்தப்படுவதாக தகவல் கிடைத்திருப்பதாக சனாதிபதி திறைசேரிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

எனவே அவ்வாறான நிதிகள் தேர்தல் பிரசாரத்துக்காக மேற்கொள்ளப்படாது என்பதற்கான வாய்ப்புகள் குறித்து உடனடியாக ஆராயுமாறும் சனாதிபதி கேட்டுள்ளார்.

சில ஒதுக்கீட்டு நிதிகள் இந்த தேர்தல் பணிக்காக பயன்படுத்தக்கூடும் என்றும் சனாதிபதி அச்சம் வெளியிட்டுள்ளார்.

இதில் முக்கியமானது அரசாங்கம் பல சம்பள உயர்வுத் திட்டங்களை முன்வைத்தது. இந்த நிலையில் அரசாங்கம் இவ்வாறான சம்பளத் திட்டங்களை அறிவிக்குமானால் அது ஐ.தே.க.வை பொறுத்தவரை பாரிய தேர்தல் வெற்றிக்கு வழி வகுக்கும் எனவும் தெரிவித்துள்ளது. (32)

# கேள்வி அறிவித்தல்

**கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு**

**வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை**

01 இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசானது இரண்டாவது பொதுக் கல்வித் திட்டத்தின் செலவுக்காக சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்திலிருந்து கடன் கிடைக்கப்பெற்றுள்ளது. இப் பணத்தில் ஒரு பகுதியை கீழே குறிப்பிடப்படும் நான்கு ஒப்பந்தங்களுக்கு பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. "IBRD கடன் மற்றும் IDA கடனின் கீழான விநியோகம்", வழிகாட்டிகள் குறிப்பிடப்பட்டவாறு தகைமையுள்ள நிறுவனங்களிடமிருந்து கேள்விகள் சமர்ப்பிக்கப்படலாம். கேள்வித் தரவுகளில் குறிப்பிடப்பட்டவாறு இக்ரா௫டன் பதிவு செய்த உள்ளூர் நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் கேள்வி சமர்ப்பிக்கலாம்.

02 செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்கு / புனரமைப்பதற்கு கோரப்படுகின்றது.

| இல. | கேள்விக் குறியீட்டு இல. | வேலை விபரம் | பதிவுத் தரம் |
|---|---|---|---|
| 01. | ஜீசுபி2/என்சு/கிளி/கிளி/2003-3b கிளிநொச்சி | 1.கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி<br>அ.02 பெண்கள் சலகூடம், 02 ஆண்கள் சலகூடம் 06 மலசலகூடம் நிர்மாணித்தல்<br>ஆ. கிணறு நிர்மாணித்தல்.<br>இ. தண்ணீர்த் தாங்கி நிர்மாணித்தல். | எம் 8 |
| 02. | ஜீசுபி2/என்சு/கிளி/கிளி/2003-40 கிளிநொச்சி | 1. கிளி/செல்லியந்தீவு அ.த.க.பாடசாலை<br>அ. 40'x25' நூலகக் கட்டடம் நிர்மாணித்தல்.<br>2. கிளி/கிராஞ்சிஅ.த.க.பாடசாலை<br>அ.40'x25' நூலகக் கட்டடம் நிர்மாணித்தல். | எம் 7 |
| 03. | ஜீசுபி2/என்சு/யா/தென்/2003-62 தென்மராட்சி. | 1. யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தி<br>60'x25' நூலகக் கட்டடம் நிர்மாணித்தல்.<br>2. யா/மட்டுவில்சந்திர மௌலிசா வித்தி<br>60'x25' நூலகக் கட்டடம் நிர்மாணித்தல். | எம் 6 |
| 04. | ஜீசுபி2/என்சு/துணு/துணு/2003-16a துணுக்காய். | 1. முல்/முதலியார்கட்டு, றோ.க.அ.த.க பாடசாலை.<br>அ.40'x25' நூலகக் கட்டடம் நிர்மாணித்தல். | எம் 7 |

03 மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1,000/= அந்தந்த வலயக்கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தில் செலுத்தி 2004.03.23 ஆம் திகதி பி.ப.3.00 மணிவரை கேள்விப்பொதிகளுக்கான கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

04 கேள்வி திறக்கப்பட்டதிலிருந்து கேள்வி 90 நாட்களுக்கும் கேள்விப் பிணை 120 நாட்களுக்கும் செல்லுபடியானதாக இருக்கவேண்டியதாகும். ஒவ்வொரு கேள்வியும், கேள்வித் தரவில் குறிப்பிடப்பட்ட கேள்விப்பிணை இணைக்கப்பட்டு, 2004.03.25 பி.ப. 3.00 மணி அல்லது அதற்குமுன் தலைவர், கேள்விச் சபை, கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறைஅமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் அனுப்பப்படல் வேண்டும். அதேநேரம் கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி முன்னிலையில் இக் கேள்விகள் திறக்கப்படும்.

05 ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை அந்தந்த வலயக்கல்விப்பணிமனைகளில் இலவசமாக பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஆர்.தியாகலிங்கம்,
தலைவர்/செயலாளர்,
அமைச்சுக் கேள்விச்சபை,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறைஅமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

(சி.9098)

## சிந்தனைக்கு



அறப்போரிலும் சரி ஆயுதப் போரிலும் சரி எமது விடுதலைப்போர் உலக சாதனைகளைப் படைத்து வருகின்றது; மனித ஈகையின் சிகரத்தை எட்டியிருக்கின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 22 -02-2004


## முரண்பாடான நடவடிக்கை

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பேச்சுக்கள் இடையிடை அதிர்ச்சி தரக்கூடிய முரண்பாடானவையாகவும் ஆச்சரியத்தைக் கொடுப்பதாகவும் இருப்பதுண்டு. இந்த வகையில் தற்பொழுது கம்பஹாவில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் ஆற்றிய உரையொன்றும் அமைந்துள்ளது.

அவர் தனது உரையில் "விடுதலைப்புலிகளை அரசியல் நீரோட்டத்திற்குள் அழைத்துவந்து வன்முறையிலிருந்து ஒதுக்கிக்கொள்வதே எமது நோக்கமாகும்" என்று கூறியுள்ளமையே ஆச்சரியத்தைக்கொடுப்பதாகவுள்ளது. ஏனெனில் விடுதலைப்புலிகள் இயக்கம் வன்முறைப்பாதையில் இருந்து விலகிக்கொள்வதற்கும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குமான முன்முயற்சிகளில் இறங்கி கணிசமான தூரம் இவற்றில் முன்னேறியும் இருந்தது. ஆனால், இவற்றிற்கு முட்டுக்கட்டையை அண்மையில் உருவாக்கியவர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவேயாகும்.

அதாவது, விடுதலைப்புலிகள் இயக்கம் கடந்த இரண்டாண்டு காலத்தில் வன்முறையிலிருந்து விலகி நீண்ட தூரம் வந்துள்ளது. ஆரம்பத்தில் இதில் சந்தேகம் கொண்டிருந்த சர்வதேச உலகம் கூட விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளில் நம்பிக்கை கொள்ளத் தொடங்கியதோடு, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சிகளை முனைப்புப்படுத்துமாறும் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியிருந்தன.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமும் சமாதான நடவடிக்கைகளுக்கான முன் முயற்சிகளை மேற்கொண்டிருந்தது என்றே கூறலாம். இந்நிலையில் சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் அரசாங்கத்தைக் கலைத்து சமாதானப் பேச்சுவார்த்தைகளின் எதிர்காலம் குறித்து கேள்வியைத் தோற்றுவித்தவர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே ஆகும்.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா, புலிகளை அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ளச் செய்வதே தனது நோக்கம் எனக் கூறியிருப்பது சில கேள்விகளை எழவைக்கின்றது. அதாவது சனாதிபதி சந்திரிகாவின் அகராதியில் அரசியல் நீரோட்டம் என்றால் என்ன? வன்முறையிலிருந்து ஒதுங்கியிருக்கச் செய்தல் என்றால் என்ன? என்பவை அவற்றின் முக்கிய கேள்விகளாகும்.

ஏனெனில் விடுதலைப்புலிகளின் தற்போதைய நடவடிக்கைகள் அரசியலின் பாற்பட்டவையாகவும் வன்முறையிலிருந்து ஒதுங்கியிருப்பதாகவும் சனாதிபதி சந்திரிகாவினால் அர்த்தம் கொள்ளப்படுபவையாகத் தெரியவில்லை. அவ்வாறு அர்த்தம் கொள்ளப்படுபவையாக இருந்திருப்பின் அவர் புலிகளை அரசியல் நீரோட்டத்தில் இணைத்துக்கொள்வது பற்றியோ, அன்றி வன்முறையில் இருந்து ஒதுக்கிக்கொள்வது பற்றியோ பேசியிருக்க முடியாது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்து-அவரின் சித்தாந்தங்களும் கோட்பாடுகளும் வித்தியாசமானவை. அவர் கடந்த காலத்தில் பல புதிய தத்துவங்கள் அடிப்படையில் நாட்டை வழிநடத்தியவர். சமாதானத்திற்கெனக் கூறிப் பாரிய யுத்தமொன்றை நடத்தி நாட்டிற்குப்பேரழிவை ஏற்படுத்தியவர்.

இவர் அன்று யுத்தம் நடத்தியபோது, விடுதலைப்புலிகளை அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொள்ளச் செய்வதற்காகவும், விடுதலைப்புலிகளின் வன்முறையை முடிவிற்குக் கொண்டு வருவதற்காகவுமே எனக் கூறிக்கொண்டவர். விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டால் மட்டுமே சமாதானப் பேச்சுவார்த்தைகள் எனவும் பிரகடனம் செய்தவர்.

அத்தகைய சனாதிபதி சந்திரிகா தற்பொழுது-அதாவது விடுதலைப்புலிகள் இயக்கம் வன்முறையை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டிருக்கையில் மீண்டும் அரசியல் நீரோட்டத்தில் இணைத்தல், வன்முறையில் இருந்து ஒதுங்கியிருக்கச்செய்தல் என்பன குறித்து பேசுவது ஒருபுறத்தில் குழப்பத்தையும், மறுபுறத்தில் சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றது.

அதாவது, சனாதிபதி சந்திரிகா ஏற்கனவே விடுதலைப் புலிகளுக்கு ரணில் அரசாங்கம் அதிகளவிலான விட்டுக் கொடுப்புக்களைச் செய்துவிட்டது எனவும், தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டு விட்டதாகவும் குற்றம்சாட்டி வருகின்றார். ஐ.தே.முன்னணி அரசாங்கம் கலைக்கப்பட்டமைக்கு இதுவும் ஒரு காரணியாகக் கூறப்பட்டுவருகின்றது.

இந்த நிலையில் சந்திரிகாவின் புதிய அறிவிப்புக்களின் படி மீண்டும் அவர் புலிகளை அரசியல் நீரோட்டத்திற்கு கொண்டுவரவும், வன்முறையிலிருந்து விலக்கிச் செல்வதற்காகவும் யுத்தத்தை ஆரம்பிக்க மாட்டார் என சந்தேகம் கொள்வது எப்படித்தவறாக முடியும்? சனாதிபதி சந்திரிகாவின் தத்துவங்கள் எப்பொழுதும் புதிரானவை மட்டுமல்ல, முரண்பாடானவையும் கூட. ஆகையினால் அவற்றிற்கு எத்தகைய விளக்கங்களும் தவறாகமாட்டாது.

# சனாதிபதி சந்திரிகாவின் கணவரது கொலைக்கு ஜே.வி.பி. காரணமெனில் அதற்கு ஆதாரமுண்டா?

## - அநுரா பண்டாரநாயக்க ஐ.தே.க.விடம் கேள்வி

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கணவர் விஜய குமாரதுங்கவை ஜே.வி.பி.யினர் தான் கொலை செய்தார்கள் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை அவ்வாறு ஆதாரங்கள் இருக்குமானால பகிரங்கமாக வெளிப் படுத்துமாறு ஐ.தே. கட்சியினரிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

இவ்வாறு சனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரா பண்டாரநாயக்க கலஹ தலாவெல கூட்டத்தில் கூறியுள்ளார்.

வடபகுதியை இன்று புலிகளிடம் தாரைவார்க்கும் நிலைக்கு ரணில் தள்ளப்பட்டுள்ளார். இதற்குக் காரணம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கள்ளத்தனமாக மேற்கொள்ளப்பட்டதுதான். இதன் காரணமாக வடபகுதியில் பெரும்பாலான பகுதியை புலிகள் தம்வசமாக்கிக் கொண்டனர்.

மேலும் இராணுவம், கப்பல் படை, விமானப்படை, விமான நிலையம், வங்கிகள், பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் கூட புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இயங்கி வருகின்றன.

பிரதமர் ரணில்விக்கிரமசிங்க ஒரு வருடகாலத்தில் இருமுறைதான் பாராளுமன்றத்தில் உரையாற்றியுள்ளார். நாட்டு மக்களின் நலனில் அவருக்கு அக்கறையில்லை அவர் உலகம் சுற்றும் வாலிபனாகி விட்டார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எமது கூட்டமைப்பு 120 ஆசனங்களைக் கைப்பற்றும். அதன் பின்னர் 20 வருடங்களுக்கு எமது அரசாங்கத்தை யாராலும் அசைக்க முடியாது.

உரவிலையேற்றம், பொருள் விலையேற்றம் என்று ஐ.தே.மு. அரசாங்கம் மீது மக்கள் வெறுப்படைந்துள்ளனர். என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# நாட்டுக்கு சாபக்கேடான குடும்ப அரசியல் ஏப்பிரல்-2ம் திகதி தகனம் செய்யப்படும்

## - முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன

(கொழும்பு)

நாட்டிக்கே சாபக்கேடான குடும்ப அரசியல் ஏப்பிரல் இரண்டாம் திகதி பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளது. இது குறித்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்வாறு முன்னாள் அரசபொது நிருவாக அமைச்சர் வஜிர அபேவர்தன கூறியுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் 40 பேர் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகுவார்கள். அப்போது புதிய முன்னணி அங்கத்தவர்கள் எதிரணிக்குச் சென்றால் நிச்சயமாக விமல் வீரவன்சவே எதிர்க்கட்சித் தலைவராகுவார்.

ஐக்கிய தேசியக்கட்சி பெரும்பான்மை வாக்குப் பலத்தில் வெற்றியை சவீகரித்துக் கொண்டதும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவர்கள் சிலரே பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யும் வாய்ப்புக் கிடைக்கும். அங்கு 40 பேர் கொண்ட ஜே.வி.பி.கட்சி தலைவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கொடுக்கவும் நேரிடும் என்பதை சிறிலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவர்களுக்கு கூறி வைக்க விரும்புகின்றேன். இந்தத் தேர்தலில் பாரிய பின்னணி உண்டு என்பதை சனாதிபதி சந்திரிகா உட்பட சிறில: கட்சிப்பிரமுகர் ஒருவர் கூடப் புரிந்து கொள்ளவில்லை.

ஜே.வி.பி.யுடனான இனவாத முன்னணிக்கு தமிழ்,முஸ்லிம் மக்கள் ஒருபோதும் ஆதரவளிக்கமாட்டார்கள் என்றும் அவர் கூட்டமொன்றில் உரையாற்றும் போது பத்தேகமவில் கூறியுள்ளார்.

# ஹக்கீமின் பிச்சாரத்திற்கு துறைமுக அதிகார சபை!

(கொழும்பு)

ஐ.தே. முன்னணியின் துறைமுக அபிவிருத்தி, கப்பற்றுறை அமைச்சர் ரவூப்ஹக்கீம் துறைமுக அதிகாரசபையில் பணியாற்றும் 122 ஊழியர்களையும் 22 வாகனங்களையும் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் ஒருவரைத்தவிர ஏனையோர் முஸ்லிம்களாவர். அத்துடன் கண்டியில் அமைந்துள்ள வீடு ஒன்றும் தேர்தல் பணிகளுக்காக பெருந்தொகை பணத்துக்கு வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது. இவ்வீடு தேர்தல் மற்றும் அரசியல் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## -19 வயதுக்குட்பட்டோருக்கான -

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் சுப்பர் சிக்ஸ் தொடர் 24ல் ஆரம்பம்

பங்களாதேஷில் நடைபெற்று வருகின்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் சுப்பர் சிக்ஸ் சுற்றில் விளையாடுவதற்காக சிறிலங்கா, சிம்பாவ்வே, தென்னாபிரிக்கா, இந்தியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான்,மேற்கிந்தியத்தீவு ஆகிய அணிகள்தகுதி பெற்றுள்ளன.

இந்தப் போட்டித் தொடரில் சிறிலங்கா-மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கிடையிலான போட்டிகள் இன்று ஆரம்பமாகவுள்ளது. சுப்பர் சிக்ஸ் சுற்றில் சிறிலங்கா அணி எதிர்வரும் 24 ஆம் திகதி தென்னாபிரிக்காவுடனும் 26ஆம் திகதி இந்தியாவுடனும் விளையாடவுள்ளது.

இரண்டு குழுக்களாக நடைபெறுகின்ற சுப்பர் சிக்ஸ் போட்டி முடிவில் ஒவ்வொரு குழுவிலும் முதலிடம், இரண்டாமிடம் பெறும் அணிகள் எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பமாகும் அரையிறுதிச் சுற்றுக்குத் தகுதி பெறவுள்ளன.

இறுதிப்போட்டி மார்ச்மாதம் ஐந்தாம் திகதி நடைபெறும்.

# பாக். சுற்றுப் பயணத்தில் சகிர்கான், அஸிஸ்நேரா பங்கேற்பர்

பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள இந்திய கிரிக்கெட் அணியில் விளையாட பந்துவீச்சாளர்களான சகிர்கானும், அஸிஸ்நேந்ராவும் உடற் தகுதியிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களின் பங்களிப்பின்றி அவுஸ்ரேலியாவுடனான போட்டிகளில் அவ்வணி சோபிக்கத் தவறியதால் இவர்களின் வருகை அணிக்கு ஆர்வம் அளிப்பதாக இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் சகிர்கான் காயம் காரணமாக அண்மைய போட்டிகளில் பங்கேற்க முடியாதிருந்தார்.

இவ்விரு அணிகளுக்குமிடையிலான போட்டிகள் அடுத்த மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அவுஸ்திரேலிய அணி 84 ஓட்டங்களால் வெற்றி

சிறிலங்கா-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 5 ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் தம்புள்ளை டிங்கிரி மைதானத்தில் பகல் இரவாக நடைபெற்ற முதலாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி 84 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப் பேடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர் முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் 263 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய சிறிலங்கா அணிமிகவிரைவில் 3விக்கெட்டுக்களை இழந்து இக் கட்டான நிலைக்குள்ளாகியது. பின்னர் 4வது விக்கெட் இணையான சங்கக்கார, மகேலஜயவர்தன இருவரும் நிலைத்து ஆடி வெற்றி வாய்ப்பை எட்டிய போதும அவர்களின் ஆட்டமிழப்பை அடுத்து 43.3 ஓவர்களில் சிறிலங்கா அணி சகலவிக்கெட்டுக் களையுமிழந்து 178 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியைத் தழுவியது.

இத்தொடரின் 2வது போட்டி இதே மைதானத்தில் இன்று பகல போட்டியாக நடைபெறும்.



## –கிளிநொச்சி கல்விவலயத்தில்
# ஆண்டு–5 புலமைப் பரிசில் பரீட்சை சித்திபெற்ற மாணவர்களுக்கு கௌரவிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை, மாணவர் அமைப்பு, கல்விக்கழகம் ஆகியவற்றின் ஆதரவுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடைமுறைப்படுத்திய பரிசில் திட்டத்தின் அடிப்படையில் 2003ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட 5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் கிளி. கல்வி வலயத்திலிருந்து சித்தி பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று கிளி. மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கிளி.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டப்பணிப்பாளர் ஜெராட் தலைமையில் நேற்று பி.ப.2.45மணிக்கு ஆரம்பமான மேற்படி மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைக்க, தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை நிறுவன துணை நிறைவேற்றுப் பணிப்பாளர் இனியவன் ஏற்றி வைத்தார்.

அடுத்து புலமைப்பரிசிலில் சித்தி பெற்ற 75 மாணவர்கள் மாலைகள் அணிவித்து மண்டபத்திற்குள் அழைத்துவரப்பட்டனர்.

கிளி. மத்திய கல்லூரி ஆசிரியை கௌரி மகேந்திரனின் வாழ்த்துப்பாடலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

வரவேற்புரை, தலைமையுரையினையடுத்து வாழ்த்துரைகளைக் கியூடெக் நிறுவன கிளி.முல்லை. மாவட்ட இணைப்பாளர் கணேசபிள்ளை, சிறுவர் பாதுகாப்பு நிதியத்திட்ட இணைப்பாளர் ஈஸ்வரன், கிளி. ம.வி அதிபர் யோகநாதன், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ராணிமைந்தன், கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம், தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் நிகழ்த்தியதுடன் மாணவர்களுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தனர்.

அதிபர்கள், ஆசிரியர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் பெருமளவில் கலந்து நிகழ்வினை சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)



# 'விழுதாகி வேருமாகி' நூல் முல்லை.யில் அறிமுக விழா

கப்டன் வானதி வெளியீட்டகத்தின் உருவாக்கத்தில் 2ம் லெப் மாலதி படையணியின் "விழுதாகி வேருமாகி" நூல் அறிமுகவிழா நேற்று மாலை 3.30 மணியளவில், விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் திரு.க.வே. பாலகுமாரன், தலைமையில் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

பொதுச்சுடரினை முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு.றங்கனும், தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறை மகளிர் பொறுப்பாளரும் ஏற்றிவைக்க, அகவணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமானது தலைமையுரையைத் தொடர்ந்து நூலாசிரியரில் ஒருவரான மலைமகளின் அறிமுகவுரையைத் தொடர்ந்து, கடற்புலிகள் மகளிர் அணியின் சிறப்புத்தளபதி விடுதலை அவர்கள் நூலை அறிமுகம் செய்து வைக்க, லெப்.அசோக், 2ம் லெப். அசோகா, வீரவேங்கை சின்ன அசோக் ஆகிய மாவீரர்களின் தந்தையார் திரு.சி.சிவகுரு அவர்கள் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து விடுதலைப்புலிகளின் படைஅறிவியற் கல்லூரி போராளி திரு.மார்சல் அவர்கள் ஆய்வுரையையும் நூலாசிரியர்களில் ஒருவரான அ.காந்தா அவர்களின் நன்றியுரையையும் தொடர்ந்து நிகழ்வு நிறைவுபெற்றது.

## -3வது தேசிய விளையாட்டுப் போட்டி
# திருமலை, மன்னார் அணிகள் இரவு நேரப்போட்டியில் வெற்றி

மூன்றாவது தமிழீழ தேசிய விளையாட்டுப் போட்டியின் நேற்றைய இரண்டாம் நாள் நிகழ்வில் இரவு மின்னொளியில் நடைபெற்ற போட்டிகளில் திருமலை, மன்னார் அணிகள் வெற்றி பெற்றன.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் திருமலை அணி மன்னார் அணியை 3-2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு நடுவராக திரு.விமலசேன கடமையாற்றினார்.

வலைப்பந்தாட்டப்போட்டியில் மன்னார் அணி வவுனியா அணியை 38-16 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார் அணி கிளிநொச்சி அணியை 4-1 என்ற கோல் கணக்கில் வென்றது. மன்னார் அணியின் சார்பில் ஜே.டிக்கோனின் இருகோல்களையும், G.A. டென்வின்சன், G.L. பெரேரா தலா ஒரு கோலையும் கிளிநொச்சி அணியின் சார்பில் ரமேஸ் காந்தும் போட்டனர்.

# இருவருட போர் நிறுத்த உடன்பாடு சமாதான உடன்பாடாக வேண்டும்
## - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர்

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்பாடு சமாதான உடன்பாடாக மாற வேண்டும் என்பதில் கண்காணிப்புக்குழு மிகவும் அக்கறையாக இருக்கின்றது.

இந்த அடிப்படையில் இரண்டு தரப்பும் தொடர்ந்து போர்நிறுத்த உடன்பாட்டை கடைப்பிடித்து வருவது எதிர்காலத்தில் போர் ஒன்று ஏற்படாது என நம்பிக்கையை கொடுத்திருக்கிறது என போர் நிறுத்த உடன்பாடு தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் டொண்புறூவ் ஹெறாவடே சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு 2 வருடங்களாவதையிட்டு அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த இரண்டு வருடங்களும் சவால் மிக்க வருடங்களாக இருந்தன. யுத்தம் நடைபெறாத போதும் இரண்டு தரப்பினருக்குமிடையே முறுகல் ஏற்படக் கூடிய நிலைமையிலே நாங்கள் வந்து செயற்படக்கூடிய நிலைமையைப் பொறுத்து மிகவும் சவால்மிக்க நிலைமையை எதிர் நோக்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 6லட்சத்து 44 ஆயிரம் பேர் யாழ்.இல் வாக்களிக்கத் தகுதி

எதிர்வரும் பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்கு யாழ். மாவட்டத்தில் 6 லட்சத்து 44 ஆயிரத்து 279 பேர் வாக்காளர் தகுதி பெற்றுள்ளனர் என யாழ் மாவட்ட தேர்தல் ஆணையாளர் இ.நடராசா தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறு வாக்காளர்கள் தம் வாக்குரிமையைப் பயன்படுத்தி யாழ் மாவட்டத்தில் 9 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்ய முடியும். இவ்வாறு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக யாழ் மாவட்டத்தில் 582 வாக்குச்சாவடிகள் நிறுவப்பட்டு வாக்கெடுப்புக்கள் இடம் பெறவுள்ளன. (33)

# கொழும்பு - கிண்ணியா பேருந்தில் ஜெலிக்னைட் கண்டுபிடிப்பு
## -முஸ்லிம் தாயும் மகனும் கைது

(கொழும்பு)

கொழும்பிலிருந்து கிண்ணியா சென்று கொண்டிருந்த பஸ்சை கிண்ணியா பொலிசார் இடைநிறுத்தி பரிசீலனை செய்த பொழுது 112 ஜெலிக்னைட் வெடிக்கும் கருவிகள் கைப்பற்றப்பட்டதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதை கொழும்பிலிருந்து கிண்ணியாவுக்கு ஒரு முஸ்லிம் தாயாரும் மகனும் கடத்தி வந்துள்ளார்கள் என தெரிவித்துள்ள பொலிஸ் நிலைய அதிகாரி இவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## பயிற்சி நெறி நிறைவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஜெயந்திநகரில் உள்ள தகவல் தொழில் நுட்ப பயிற்சி நிலையத்தில் கணனி கற்கை நெறியினை 2வது அணியை சேர்ந்த [illegible] பேர் நிறைவு செய்துள்ளதா[illegible] தெரிய வருகின்றது இதில் 24 பெண்களும் 08 ஆண்களும் அடங்குவர். இங்கு சென்ற வருடம் 1வது அணியில் 47 பேர் கற்கை நெறியை முடித்து வெளியேறியமையும் நோக்கத்தக்கது. (15)

## சிரமதானப்பணி

தண்ணீருற்று நீராவிப்பிட்டி சுதா முன்பள்ளியும், அதை அண்டிய வீதிப்பகுதியும் நீராவிப் பிட்டி, கிச்சிலாபுரம் ஆகிய பகுதி மக்களினால் சிரமதானப் பணி மூலம் புனரமைக்கப்பட்டது. சுதா முன்பள்ளி கூரை மேயாததினால் மழை நீரினால் சுவர்கள் இடிந்து விழுந்து சிறார்கள் கல்வி கற்க முடியாத பற்றைகள் வளர்ந்திருந்த நிலையிலேயே இம் மக்கள் சிரமதானப் பணி மூலம் துப்பரவு செய்ததாக மக்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (20)

# மல்லாவியில் கிணற்றில் வீழ்ந்து சிறுமி பரிதாப மரணம்

(மல்லாவி)

பாதுகாப்பு அற்ற கிணற்றில் தவறி விழுந்து சிறுமி மரணமானார். மேற்படி சம்பவம் நேற்று மல்லாவி 3ஆம் யூனிற் பகுதியில் இடம் பெற்றது.

சம்பவம் குறித்து தெரிய வருகையில் சிறுமி பேத்தியாருடன் இருந்து விட்டு கடைக்குச் சென்று இனிப்பு வாங்கி வருகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றவர் வீட்டு வளவில் உள்ள பாதுகாப்பற்ற அந்த கிணற்றில் தவறிவிழுந்து மரணமடைந்துள்ளார் மல்லாவி 3ஆம் யூனிற்றைச் சேர்ந்த நிமலசிறி சாமினி(வயது 08)என்பவரே மரணமானவராகும். (24)

## ஆனந்த..

வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றிருப்பதாகத் தெரியவருகிறது.

இதேவேளை சுயேட்சையாக போட்டியிடுவது குறித்து தாம் இன்னமும் முடிவு செய்யவில்லை எனவும் 45,50 வருட அனுபவமுள்ளதான் ஏதாவதொரு முடிவுக்கு வரத்தானேவேண்டும் எனவும் ஆனந்தசங்கரி கூறியுள்ளார். (27)

## நகை...

இந்நிலையில் குறித்த வீதியூடாக பிரயாணஞ்செய்து கொண்டிருந்த சத்தியசீலன் துவாரகன் எனும் சிறுவனுமே அப்போது படுகாயமடைந்துள்ளான்.

படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட இவ்விருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். சாவகச்சேரி பொலிஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (27)

# கண் அளவையாளரால் ஆலோசனை வழங்கல்

(கிளிநொச்சி)

அவுஸ்திரேலியாவிலிருந்து வருகைதந்திருக்கும் கண் அளவையாளரால் பார்வைக்குறைபாடு உள்ளவர் கண்பார்வையிடப்பட்டு ஆலோசனைகளும் வில்லைகளிற்கான தெரிவும் மேற்கொள்ளப்படவுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் நாளை திங்கட்கிழமை காலை 8.00மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை இச் சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

பயன் பெறவிரும்புவோர் உரிய நேரத்திற்குள் வெளிநோயாளர் பகுதிக்கு நேரில் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

## கொழும்பு...

நான் இம்முறை யாழ் மாவட்டத்தில் போட்டியிடாமல் கொழும்பில் போட்டி இடுவதற்கு முடிவெடுத்தமைக்கு பல்வேறு காரணங்கள் உண்டு. அதில் பிரதானமான காரணம், தமிழர்களுடைய ஒற்றுமையை வலியுறுத்தி வடக்கு கிழக் கில் வாழும் மக்கள் எல்லாம் ஒற்று மைப்பட்டு ஒரே குரலில் தங்களுடைய செய்தியை சிறிலங்காவின் நாடாளுமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்பதற்காகவும் தமிழ்க்கூட்டமைப்பிற்கு வலுச்சேர்ப்பதற்காகவுமே யாழ். மாவட்டத்தில் இருந்து விட்டுக் கொடுக்கும் முறையில் ஒதுங்கி உள்ளேன் என்றார்.

## எமது இனத்தின்..

வரும் பெருமைக்குரியவர்கள்.

இந்த மாணவச் செல்வங்களை கல்விரீதியாக வளர்த்தெடுக்க வேண்டும் என்பதற்காக அயராது உழைத்த கல்வித்துறை சார்ந்தவர்கள் மற்றும் பெரும் துயரங்களின் மத்தியிலும் இந்தப் பிள்ளைகளின் கல்விக்காக உழைத்த பெற்றோர்கள் அனைவரையும் நாம் வாழ்த்துகின்றோம்.

இந்த மாணவர்களின் கல்விக்காகவும் அவர்களின் எதிர்கால நலன்களுக்காகவும் விடுதலைப் புலிகள் என்றும் உழைப்பார்கள் என்பதனையும் இந்த இடத்தில் கூறிவைக்க விரும்புகிறோம். இவர்களுடைய வாழ்வுக்காகவும் எதிர்கால நலனுக்காகவுமே நாம் பெரும் போரைத் தொடுத்தோம். அந்தப் போரின் நிமித்தம் நாம் வெற்றிகளைப் படைத்திருக்கின்றோம். இந்தப்போரை வெற்றிகொண்டதன் மூலம் நாம் மிகவும் பலம் வாய்ந்த சமூகம் என்பதை உலகிற்கு உணர்த்தியிருக்கிறோம்.

அதனால் நாம் இன்று ஒரு சமாதானப் பாதையிலே அரசியற் தீர்வுக்கான நடவடிக்கைகளை நகர்த்திக் கொண்டிருக்கிறோம். இவையனைத்தும் எங்கள் ஒன்றிணைந்த பலத்தின் சக்தியாக உலகத்திற்கு உணர்த்தப்பட்டுள்ளது. இதன் இறுதிவடிவம் அடுத்து வருகின்ற தேர்தலில் அடங்கியிருக்கின்றது.

எமது இனம் ஒன்றிணைந்து ஒருமித்த சக்தியாக உலகிற்கு பறைசாற்றிய பல வடிவங்களின் ஒரு கட்டமாகவே வரப்போகும் பாராளுமன்றத் தேர்தல் களம் அமைந்திருக்கின்றது. இன்று சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் காட்டுகின்ற ஒரு பெரும் பலமாக ஒன்றிணைந்த பெரும் சக்தியாக அமையப்போகின்ற நாளைய அந்த நிகழ்வும் எங்களுக்கு ஓர் பெரும் வெற்றியை ஏற்படுத்தித் தரும் என்கின்ற அசைக்க முடியாத பெரும் நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

இந்த மாணவர்களின் எதிர்கால நலனுக்காக இன்று எப்படி ஒன்றிணைந்து உழைத்தீர்களோ அதைப் போன்று என்றும் எமது கல்விச் சமூகத்தை வளர்ப்பதற்கு அனைவரும் பாடுபட வேண்டும் எனவும் தெரிவித்தார். (லோ)

## இந்திய...

வளங்களும் சூறையாடப்பட்டும் வருகின்றன. இதுகுறித்து பல தடவை சிறிலங்கா கடற் படையினரிடம் முறையிட்டும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படாததால் குடாநாட்டு மீனவர்கள் தாமாகவே இந்திய மீனவர்களை விரட்டியடிக்க முற்படுகின்றனர். ஆயினும் இவ்வாறு விரட்டியடிக்க முற்படும் குடாநாட்டு மீனவர்கள் படையினரால் பழிவாங்கப்பட்டு வருகின்றமை மிகவும் வேதனையைத் தருகின்றது.

இவற்றை எல்லாம் நோக்கும் போது தமிழர் பிரதேச கடல் வளங்களைச் சுரண்டிச்செல்வதற்கான வாய்ப்பினையும் ஒத்துழைப்பினையும் இந்திய மீனவர்களுக்கு இலங்கை கடற்படையினர் வழங்கி வருவதாக கருதத்தோன்றுகிறது என்பதைச் சுட்டிக்காட்டியே அவர் இக்குற்றச்சாட்டை தெரிவித்துள்ளார். (33)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.